**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**<u>அசல் வழக்கு எண். 73/2021</u>**

2024- ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24– ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW2 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயராமன் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | சிவசாமி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | அரியலூர் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 52/2024 |

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>** :-

1. நான் தற்போது நீதிமன்றத்தில் சாட்சியத்திற்காக கொண்டு வந்திருக்கும் ஆவணமான 12.01.2012 ம் தேதியிட்ட கிரய பத்திரம் எனது மனைவி சுஜாதா என்பவர் பெயரில் கிரயம் பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி கிரயத்தை எனது மனைவிக்கு இந்திரா மற்றும் பாலமுருகன், மணிமுருகன் ஆகியோர் எழுதி கொடுத்துள்ளார் என்றால் எனது மனைவிக்கு கிரயம் கொடுத்தது இந்திரா மட்டும் தான். இந்திராவினுடைய கிரய பத்திரம் மற்றும் அவருடைய கிரய முன்னவர்களான பாலமுருகன் மற்றும் மணிமுருகன் ஆகியோர்கள் கிரயம் பெற்ற கிரய பத்திரத்தை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 6 ஆன வில்லங்க சான்றிதழில் இந்திராவிற்கு கிரயம் கொடுத்த சீனிவாசன், பாலமுருகன், மணிமுருகன் ஆகியோர் கிரயம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி வில்லங்க சான்றிதழில் பாதை பாத்தியம் மட்டும் அடி பூமி பாத்தியம் இல்லை என்று 59 சென்ட் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் பாதை உள்ளதாக காட்டியுள்ளார்கள் 59 சென்ட் அந்த பாதைக்கு உள்ளாக வருகிறதா என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை. 59 சென்ட் பாதை வருகிறதா இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாமல் 29 1/2 சென்டை நான் கிரயம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை விபரம் தெரிந்துதான் வாங்கினேன். நான் தவறுதலாக முன்னுக்கு பின் முரணான பதிலை சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. வில்லங்க சான்றிதழில் குறிப்பிட்டுள்ளபடி பாதை பாத்தியம் மட்டுமே உள்ளது என்றாலும் அடி பூமி பாத்தியம் இல்லை என்று சொன்னால், அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அடி பூமியை எனது கிரய முன்னவர்கள் விற்பதற்கோ அதனை நான் வாங்குவதற்கோ உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கிரய பத்திரம் எனது முன்னவரான இந்திரா, மற்றும் அவருடைய கிரய முன்னவர்களான

பாலமுருகன், மணிமுருகன் மற்றும் வசந்தா ஆகியோர் பாதை இருப்பதாக மோசடியாக பத்திரம் எழுதி உள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த மோசடி ஆவணத்தின் அடிப்படையில் தான் பட்டா தவறுதலாக மாறி உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண். 111/1M என்பது தற்போது வரை நிலவியல் நடைபாதையாகதான் இருந்து வருகிறது. பாதையாகவோ, வண்டிபாதையாகவோ இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபரங்கள் தெரியாமல் நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMclum JM Court, Kunnam